மோட்டார் வாகன விபத்து கோரிக்கைத் தீர்ப்பாயம், கடலூர்

சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண்.1, கடலூர்

முன்னிலை : - திரு.V.ஆனந்தன் எம்.காம்., பி.எல்.,
மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கைத் தீர்ப்பாயர்,
சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.1, கடலூர்.

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23-ஆம் நாள் புதன் கிழமை

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 07ம் நாள்

எம்.சி.ஓ.பி.எண்கள்.59/2024, 60/2024 மற்றும் 61/2024

மோ.வா.வி.கோ.ம.எண்.59/2024

A. தமிழரசி (வயது 47)
க/பெ. அய்யாவு ... மனுதாரர்

/ எதிர் /

1. L. சிவநாதன்
   த/பெ. லோகநாதன்
2. கிளை மேலாளர்
   சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,
   கடலூர். ... எதிர்மனுதாரர்கள்

மோ.வா.வி.கோ.ம.எண்.60/2024

மைனர் R. ஸ்ரீ பிரனவ் (வயது 3)
த/பெ. ராமன்
(மைனர் மனுதாரரின் பாதுகாவலர் என்ற
முறையில் அவரது தந்தை T. ராமன்) ... மனுதாரர்

/ எதிர் /

1. L. சிவநாதன்
   த/பெ. லோகநாதன்
2. கிளை மேலாளர்
   சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,
   கடலூர். ... எதிர்மனுதாரர்கள்

மோ.வா.வி.கோ.ம.எண்.61/2024

T. ராமன் (வயது 27)
த/பெ. திரிசங்கு ... மனுதாரர்

/ எதிர் /

1. L. சிவநாதன்
த/பெ. லோகநாதன்
2. கிளை மேலாளர்
சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,
கடலூர். ... எதிர்மனுதாரர்கள்

* * * * *

மேற்கண்ட மனுக்களில் கூறப்பட்ட விபத்துக்கள் ஒரே விபத்து என்பதால் மூன்று மனுக்களையும் சேர்த்து நடத்த வேண்டுமென குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்படி மனுக்கள் 10.07.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மூன்று மனுக்களிலும் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவமணி அவர்கள் முன்னிலையாகியும், மூன்று மனுக்களிலும் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.வெற்றிவேல் அவர்கள் முன்னிலையாகியும், மூன்று மனுக்களிலும் 1-ம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், 1-ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததினால் ஒருதலைபட்சமாக பாவிக்கப்பட்டும், இவ்வழக்குகளில் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இந்த மனுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

பொதுவான உத்தரவு

மோ.வா.வி.கோ.ம.எண்.59/2024

கடந்த 11.09.2023-ம் தேதியன்று நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்கு இழப்பீடாக ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்)

எதிர்மனுதாரர்களிடமிருந்து கேட்டு மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166(1)-ன் கீழ் இந்த மனு மனுதாரரால் கொண்டு வரப்பட்டுள்ளது.

மோ.வா.வி.கோ.ம.எண்.60/2024

கடந்த 11.09.2023-ம் தேதியன்று நடந்த சாலை விபத்தில் இளவர் மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்கு இழப்பீடாக ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) எதிர்மனுதாரர்களிடமிருந்து கேட்டு மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166(1)-ன் கீழ் இந்த மனு மனுதாரரால் கொண்டு வரப்பட்டுள்ளது.

மோ.வா.வி.கோ.ம.எண்.61/2024

கடந்த 11.09.2023-ம் தேதியன்று நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்கு இழப்பீடாக ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) எதிர்மனுதாரர்களிடமிருந்து கேட்டு மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166(1)-ன் கீழ் இந்த மனு மனுதாரரால் கொண்டு வரப்பட்டுள்ளது.

2. மோ.வா.வி.கோ.ம.எண்கள்.59/2024, 60/2024 மற்றும் 61/2024 மனுக்களின் சுருக்கம்

கடந்த 11.09.2023 அன்று இரவு சுமார் 08.15 மணியளவில் மனுதாரர்களான தமிழரசி, இளவர் மனுதாரரான பிரனவ் மற்றும் ராமன் ஆகியோர்கள் PY-01-CZ-7881 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் தமிழரசி மற்றும் ஸ்ரீ பிரனவ் ஆகியோர்கள் பின்னால் உட்கார்ந்து கொண்டும், மேற்படி வாகனத்தினை ராமன் என்பவர் புதுக்கடை பைபாஸ் ரோடு அருகில் உள்ள மாந்தோப்பு எதிரில் இடதுபுற ஒரமாக ஓட்டிச் சென்ற போது, அவர்களுக்கு பின்னர் வந்த வந்த 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டதுமான TN-31-CC-5018 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர்கள் பயணம் செய்த இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார் என்றும், மேற்படி விபத்தில் எம்.சி.ஓ.பி.59/2024 என்ற வழக்கின் மனுதாரரான

தமிழரசி என்பவருக்கு, வலது கை முட்டி மற்றும், தோள்பட்டையில் பலத்த அடிப்பட்டு வீக்கமும், காயமும், இரத்தக்கட்டும், இடது கால் பாதத்தில் டார்சம் பகுதியில் கிழிந்த காயமும், தலையில் பலத்த அடிப்பட்டு வீக்கமும், இரத்தக்காயமும் ஏற்பட்டு, புதுச்சேரி கரிக்கலாம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், பின்னர் புதுச்சேரி இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், மேற்படி விபத்து சமயத்தில் தமிழரசி என்ற மனுதாரருக்கு வயது 47 என்றும், அவர் கூலி வேலை செய்து மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விபத்தில் எம்.சி.ஓ.பி.60/2024 என்ற வழக்கின் இளவர் மனுதாரரான ஸ்ரீ பிரனவ் என்பவருக்கு வலது கால் மற்றும் முட்டியில் பலத்த அடிப்பட்டு வீக்கமும், கிழிந்த காயமும், தலையில் பலத்த அடிப்பட்டு வீக்கமும், காயமும், இரத்தக்காயமும் ஏற்பட்டு, புதுச்சேரி கரிக்கலாம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், மேற்படி விபத்து சமயத்தில் ஸ்ரீ பிரனவ் என்ற மனுதாரருக்கு வயது 3 என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விபத்தில் எம்.சி.ஓ.பி.61/2024 என்ற வழக்கின் மனுதாரரான ராமன் என்பவருக்கு வலது கை முட்டி மற்றும் தோள்பட்டையில் பலத்த அடிப்பட்டு வீக்கமும், காயமும், இரத்தக்கட்டும், வலது கால் மற்றும் முட்டியில் பலத்த அடிப்பட்டு வீக்கமும், கிழிந்த காயமும், தலையில் பலத்த அடிப்பட்டு வீக்கமும், காயமும், இரத்தக்காயமும் ஏற்பட்டு, புதுச்சேரி கரிக்கலாம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், பின்னர் புதுச்சேரி இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், மேற்படி விபத்து சமயத்தில் ராமன் என்ற மனுதாரருக்கு வயது 27 என்றும், அவர் கொத்தனாராக வேலை செய்து மாதம் ரூ.25,000/- சம்பாதித்து வந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவு தான் காரணம் என்பதினாலும், 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதினாலும் மனுதாரர்களுக்கான இழப்பீட்டு தொகையை 1, 2

எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என இம்மனுக்கள் மனுதாரர்களால் கொண்டுவரப்பட்டுள்ளது.

3. மோ.வா.வி.கோ.ம.எண்.50/2024, 60/2024 மற்றும் 61/2024-க்கான 2-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரைகளின் சுருக்கம் :-

மனுதாரர்களின் மனு தேவையற்றது மற்றும் நியாயமற்றது என்பதினால் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும், மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளில் நேரடியாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர்த்து இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்து சமயத்தில் இந்த எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், அந்த வாகனத்தினை ஓட்டிய ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதும், அந்த வாகனத்திற்கு அனுமதிச் சான்று, பதிவுச் சான்று மற்றும் தகுதிச் சான்று இருந்தது என்பது மறுக்கப்படுகிறது என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் விபத்து நிகழ்ந்தது என்பது மறுக்கப்படுகிறது என்றும், அவ்வாறு விபத்து நடந்தது என்பதினை இந்த மனுதாரரே நிரூபிக்க வேண்டுமென்றும், மனுதாரரின் வயது, வருமானம் மற்றும் தொழில் ஆகியவற்றினை இந்த மனுதாரர் உரிய ஆவணங்களைக் கொண்டு நிரூபிக்க வேண்டுமென்றும், விபத்தினால் இந்த மனுதாரருக்கு காயம் ஏற்பட்டது என்பதினையும், அதனால் அவர் சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள் என்பதினையும், அதனால் அவருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டது என்பதினையும் இந்த மனுதாரர் உரிய முறையில் நிரூபணம் செய்ய வேண்டுமென்றும், கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகபட்சம் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4. மோ.வா.வி.கோ.ம.எண்.59/2024, 60/2024 மற்றும் 61/2024-க்கான மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :-

1. வழக்கு விபத்தானது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் நிகழ்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதா?
2. மனுதாரரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறேனில் எவ்வளவு?

3. இழப்பீட்டு தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் யார் ?

2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது.

5. இம்மனுக்களில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர் தரப்பில் ம.சா.1-ன் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும், மனுதாரர் தரப்பில் ம.சா.2-ன் மூலம் ம.சா.ஆ.6 முதல் ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1-ன் மூலம் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. மோ.வா.வி.கோ.ம.எண்கள்.59/2024, 60/2024 மற்றும் 61/2024 பிரச்சனை எண்.1 க்கான தீர்வு :-

மனுதாரர்களின் மனுவிற்கு 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் எடுத்து வைக்கப்படவில்லை. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் கண்டவாறு விபத்து நிகழ்ந்து என்பதினை இந்த மனுதாரர்களே நிரூபிக்க வேண்டுமென்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஒட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் விபத்து நடைபெறவில்லை என எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தான் மனுதாரர்கள் தங்களுடைய சாட்சியத்தில் கூறும் பொழுது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரே அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தினை ஓட்டி வந்து இந்த மனுதாரர்கள் பயணம் செய்த மோட்டார் இருச்சக்கர வாகனத்தின் பின்புறமாக மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார் என ஏற்கத்தக்க வகையிலும், நம்பத்தகுந்த வகையிலும் எடுத்துரைத்துள்ளார்கள். அவர்களுடைய சாட்சியத்தினை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது அல்லது நம்பக்கூடாது என்பதற்கு 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கத்தக்க காரணம் கூறப்படவில்லை. இவ்வழக்கு விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1, 1-ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீதே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்புபடுத்தும்

வகையிலே மனுதாரர்களின் சாட்சியமும் அமைந்துள்ளது. அவ்வாறானச் சூழ்நிலையில் தான் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளையோ அல்லது சம்பவத்தோடு தொடர்புடைய சாட்சிகளையோ இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரிக்க தவறிவிட்டார். 2-ம் எதிர்மனுதாரரின் இந்த செயல்படானது மனுதாரர்களின் வழக்கினை ஒப்புக்கொள்ளும் விதமாகவே அமைந்துள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் ஏற்கத்தக்க சாட்சியம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் தான் விபத்து நிகழ்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

7. மோ.வா.வி.கோ.ம.எண்.59/2024 பிரச்சனை எண்.2 க்கான தீர்வு :-

இவ்வழக்கு விபத்தானது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் தான் நிகழ்ந்தது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டு விட்டதினால் இந்த மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. ம.சா.ஆ.2 காயச்சான்று, ம.சா.ஆ.3 மருத்துவரின் மருந்து பரிந்துரைச் சீட்டு, ம.சா.ஆ.4 வெளிப்புற நோயாளிச் சீட்டு ஆகியவற்றினை பரிசீலிக்கும் பொழுது மனுதாரருக்கு விபத்தினால் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளார் என்பது தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் குறித்து மருத்துவர் கருத்து கூறும் பொழுது ம.சா.ஆ.2-ன் வாயிலாக சாதாரண காயம் என கருத்து கூறியுள்ளார். எனவே மனுதாரருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதினால் அவருக்கு வலி மற்றும் துன்பம் ஏற்பட்டிருக்கும் என்றும், மருத்துவச் செலவினங்களும், போக்குவரத்து செலவினங்களும் ஏற்பட்டிருக்கும் என்றும், மேலும் குணமாவதற்கு கூடுதல் ஊட்டச்சத்து எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து, மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாக அவருக்கு ஏற்பட்ட வலி, துன்பம், போக்குவரத்து செலவினங்களுக்கும் கூடுதல் ஊட்டச்சத்து எடுத்துக் கொண்டதற்கும் தோராயமாக இழப்பீடு வழங்கலாம் என்று முடிவு

செய்து மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையாக **ரூ.50,000/-** வழங்க வேண்டுமென இந்நீதிமன்றம் இந்த பிரச்சினைக்கு விடை காண்கிறது.

8. மோ.வா.வி.கோ.ம.எண்.60/2024 பிரச்சனை எண்.2 க்கான தீர்வு :-

இவ்வழக்கு விபத்தானது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் தான் நிகழ்ந்தது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டு விட்டதினால் இந்த மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. ம.சா.ஆ.6 காயச்சான்று, ம.சா.ஆ.7 மருந்து பரிந்துரைச் சீட்டு ஆகியவற்றினை பரிசீலிக்கும் பொழுது மனுதாரருக்கு விபத்தினால் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளார் என்பது தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் குறித்து மருத்துவர் கருத்து கூறும் பொழுது ம.சா.ஆ.6-ன் வாயிலாக சாதாரண காயம் என கருத்து கூறியுள்ளார். எனவே மனுதாரருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதினால் அவருக்கு வலி மற்றும் துன்பம் ஏற்பட்டிருக்கும் என்றும், மருத்துவச் செலவினங்களும், போக்குவரத்து செலவினங்களும் ஏற்பட்டிருக்கும் என்றும், மேலும் குணமாவதற்கு கூடுதல் ஊட்டச்சத்து எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து, மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாக அவருக்கு ஏற்பட்ட வலி, துன்பம், போக்குவரத்து செலவினங்களுக்கும் கூடுதல் ஊட்டச்சத்து எடுத்துக் கொண்டதற்கும் தோராயமாக இழப்பீடு வழங்கலாம் என்று முடிவு செய்து மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையாக **ரூ.50,000/-** வழங்க வேண்டுமென இந்நீதிமன்றம் இந்த பிரச்சினைக்கு விடை காண்கிறது.

9. மோ.வா.வி.கோ.ம.எண்.61/2024 பிரச்சனை எண்.2 க்கான தீர்வு :-

இவ்வழக்கு விபத்தானது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் தான் நிகழ்ந்தது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டு விட்டதினால் இந்த மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. ம.சா.ஆ.8 காயச்சான்று, ம.சா.ஆ.9 வெளிப்புற

நோயாளிச் சீட்டு ஆகியவற்றினை பரிசீலிக்கும் பொழுது மனுதாரருக்கு விபத்தினால் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளார் என்பது தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் குறித்து மருத்துவர் கருத்து கூறும் பொழுது ம.சா.ஆ.8-ன் வாயிலாக சாதாரண காயம் என கருத்து கூறியுள்ளார். எனவே மனுதாரருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதினால் அவருக்கு வலி மற்றும் துன்பம் ஏற்பட்டிருக்கும் என்றும், மருத்துவச் செலவினங்களும், போக்குவரத்து செலவினங்களும் ஏற்பட்டிருக்கும் என்றும், மேலும் குணமாவதற்கு கூடுதல் ஊட்டச்சத்து எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து, மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாக அவருக்கு ஏற்பட்ட வலி, துன்பம், போக்குவரத்து செலவினங்களுக்கும் கூடுதல் ஊட்டச்சத்து எடுத்துக் கொண்டதற்கும் தோராயமாக இழப்பீடு வழங்கலாம் என்று முடிவு செய்து மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையாக **ரூ.50,000/-** வழங்க வேண்டுமென இந்நீதிமன்றம் இந்த பிரச்சினைக்கு விடை காண்கிறது.

10. மோ.வா.வி.கோ.ம.எண்கள்.59/2024, 60/2024 மற்றும் 61/2024 – பிரச்சினை எண்.3-க்கான தீர்வு :-

மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவை கொண்டு வரும் பொழுது 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரருக்கான இழப்பீடு தொகையினை 2-ம் எதிர்மனுதாரரும் செலுத்த கடமைப்பட்டுள்ளார் என வாதிடப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தான் கற்றறிந்த 2-ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தின் முன்பு வாதிடும் பொழுது இவ்வழக்கு விபத்தானது மோட்டார் வாகன திருத்தச்சட்டம் அமலுக்கு வந்த 01.04.2022-க்கு பிறகே விபத்து நிகழ்ந்தது என்றும், காப்பீடும் மேற்படி திருத்த சட்டத்திற்கு பிறகே 1-ம் எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும், அதாவது காப்பீட்டு நிறுவனமான 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையினை வழங்கிவிட்டு 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து

வசூலித்துக் கொள்ளலாம் என சட்டப்பிரிவு நீக்கம் செய்யப்பட்டு விட்டதினால், 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் அது காப்பீட்டு விதிமீறல் என்றும், அவ்வாறு காப்பீட்டு விதிமீறல் இருக்கும் பட்சத்தில் இந்த எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் வழங்கவேண்டிய அவசியமில்லை என எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தான் ம.சா.ஆ.5, 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கையினை பரிசீலிக்கும் பொழுது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஒட்டுநருக்கான ஓட்டுநர் உரிமம் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என கூறப்பட்டுள்ளது. அவ்வாறானச் சூழ்நிலையில் தான் மனுதாரர் தரப்பிலோ அல்லது 1-ம் எதிர்மனுதாரர் தரப்பிலோ 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதினை நிரூபணம் செய்ய தவறிவிட்டார்கள். எனவே காப்பீட்டு விதிமீறல் உள்ளது என்பது பட்டவர்த்தமாக தெரியவருகிறது. அவ்வாறானச் சூழ்நிலையில் தான் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தின் முன்பு வாதிடும் பொழுது கீழ்கண்ட நமது மாண்புமிகு அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்பு மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பினைச் சுட்டிக் காட்டி 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டினை செலுத்தி விட்டு 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலிக்க உத்தரவிட வேண்டுமென கூறியுள்ளார்.

HIGH COURT OF JUDICATURE AT ALLAHABAD

ICICI Lombard General Insurance Co. Ltd., - vs – Smt. Arti Devi and 8 Others on 31 January, 2025

38. The Court, therefore, holds that mere omission of proviso attached to sub – section (4) Section 149 of Motor Vehicle Ace 1988 after its replacement by Section 150 of Motor Vehicles (Amendment) Act, 2019 (32 of 2019), neither takes away the liability of the insurer to pay the claimants nor its right to recover the said amount from the owner. The law to this effect remains intact and unaffected by Amendment act, 1019 and, hence, insurer shall continue to indemnify the owner’s risk in relation to

accidnets taking place after 01.04.2022 and “PAY & RECOVER” principle will still continue to govern the filed advancing social object of the Statute protecting third party interest. Principle of law laid down by the Supreme Court in National Insurance Company Limited Vs – Swaran Singh and others, JT 2004 (1) SC 190 has not lost its significance and binding effect despite omission of proviso. Held accordingly.

2025(1) TNMAC 597

The Branch Manager, M/s. SBI General Insurance Company Limited – Vs – Muthulakshmi and 4 Others

30. In View of the discussions made earlier, this court holds that notwithstanding deletion of Proviso to Sub-Section (4) of Old Section 149 and Sub-Section (5) of very same section with is renumbered as Section 150, the insurer’s liability to honour the award passed against the insured in respect of third party claims continues and in the event of insurer’s success in raising a defence under Sub-Section (2) of New Section 150, the Tribunal can every well order pay and recovery.

மேற்கண்ட நமது மாண்புமிகு அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பினை பரிசீலிக்கும் பொழுது மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 149(4) நீக்கம் செய்யப்பட்ட போதிலும், மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 150 தற்போதும் நடைமுறையில் இருந்து வருகிறது என்றும், அதனால் மோட்டார் வாகன திருத்தச் சட்டம் 2019 அதனை எந்தவகையிலும் பாதிக்காது என கூறப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கில் காப்பீட்டு விதிமீறல் இருந்த போதிலும், மோட்டார் வாகன சட்டப்பிரிவு 150-னை பரிசீலிக்கும் பொழுது காப்பீட்டு நிறுவனம் 3-ம் தரப்பினருக்கு இழப்பீடு வழங்கி விட்டு அதனை 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம் என்ற நடைமுறை தற்போதும் உள்ளது என்பது தெரியவருவதினால் மனுதாரருக்கான இழப்பீட்டு தொகையினை 2-ம் எதிர்மனுதாரர்

செலுத்தி விட்டு 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டுமென இந்நீதிமன்றம் இந்த பிரச்சினைக்கு விடை காண்கிறது.

மோ.வா.வி.கோ.எண்.59/2024

1. முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.50,000/-** 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.
2. மேற்படி இழப்பீட்டு தொகை அதற்கு செலுத்தப்பட்ட வட்டி மற்றும் செலவு தொகையை 2-ம் எதிர்மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள உரிமை அளித்து உத்தரவிடப்படுகிறது.
3. மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP592024, IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-000268-2024 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
4. மேற்படி இழப்பீட்டு தொகையை மனுதாரர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய முறையில் உடனடியாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
5. மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும்,

மனுதாரரே மேலோப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும்.

6. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.2,000/- என நிர்ணயிக்கப்படுகிறது.
7. மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
8. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.

மோ.வா.வி.கோ.எண்.60/2024

1) முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.50,000/-** 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

2) மேற்படி இழப்பீட்டு தொகை அதற்கு செலுத்தப்பட்ட வட்டி மற்றும் செலவு தொகையை 2-ம் எதிர்மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள உரிமை அளித்து உத்தரவிடப்படுகிறது.

3) மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP602024 IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான

CNR.No.TNCD01-000267-2024 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

4) மேற்படி இழப்பீடு தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இளவர் மனுதாரர் 18 வயது பூர்த்தி செய்யும் காலம் வரையிலோ அல்லது மூன்று ஆண்டு காலத்திற்கோ இதில் எது அதிகமோ அதுவரை நிரந்தர வைப்பீட்டில் வைக்க உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரரே மேலோப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும்.

6) வழக்கறிஞர் கட்டணமாக ரூ.2,000/- என நிர்ணயிக்கப்படுகிறது.

7) மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

8) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.

மோ.வா.வி.கோ.எண்.61/2024

1) முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.50,000/-** 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம்

ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

2) மேற்படி இழப்பீட்டு தொகை அதற்கு செலுத்தப்பட்ட வட்டி மற்றும் செலவு தொகையை 2-ம் எதிர்மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள உரிமை அளித்து உத்தரவிடப்படுகிறது.

3) மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP612024 IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-000266-2024 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

4) மேற்படி இழப்பீட்டு தொகையினை மனுதாரர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய முறையில் உடனடியாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரரே மேலோப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும்.

6) வழக்கறிஞர் கட்டணமாக ரூ.2,000/- என நிர்ணயிக்கப்படுகிறது.

7) மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

8) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில்

சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிரிதி எடுக்கப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23-ம் நாள் புதன் கிழமை இந்த உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

V ANANTHAN Digitally signed by V ANANTHAN Date: 2025.07.23 18:51:04 +0530

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாயர்,
சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.1,
கடலூர்.

<u>Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., - Vs- Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020</u>

<u>மோ.வா.வி.கோ.எண்.59/2024</u>

1.	(Name and Address of the Claimant) (மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	A. Tamilarasi, W/o. Ayyavu, (Age 47) residing at: No.94, Mariyammankoil Street, Singirikudi & Post, Cuddalore Taluk, Cuddalore District – 605 007.
2.	Name and Address of the Respondents (எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	1) L. Sivanathan, S/o. Loganathan, No.10, Mariyammankoil Street, Chellancherry & Post, Cuddalore Taluk. Cuddalore District – 605 106. 2) The Branch Manager, Cholamandalam MS General Insurance Company Ltd., BE Well Hospital Campus Inside, Bharathi Road, Cuddalore & Taluk, Cuddalore District – 607001.
3.	Date of Filing of the Claim Petition (மனுதாக்கல் செய்யப்பட்டநாள்)	03.01.2024
4.	Date of Award (உத்தரவு பகரப்பட்ட நாள்)	23.07.2025

<table>
<tr><td>5.</td><td>Amount of Award
(வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை)</td><td>ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)</td></tr>
<tr><td>6.</td><td>Interest Rate Applicable</td><td>7.5%</td></tr>
<tr><td>7.</td><td>Date from which interest is payable
(எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்)</td><td>மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வட்டி வழங்க வேண்டும்</td></tr>
<tr><td>8.</td><td>Costs if any</td><td>2-ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலவு தொகையான ரூ.2509/- செலுத்தி விட்டு 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும்.
<table>
<tr><td colspan="4"><u>Particulars of costs</u></td></tr>
<tr><td colspan="2"><u>For Petitioner</u></td><td colspan="2"><u>For Respondent:</u></td></tr>
<tr><td></td><td>Rs.</td><td></td><td>Rs.</td></tr>
<tr><td>Court fee</td><td>375.00</td><td></td><td></td></tr>
<tr><td>Stamp in Vakalath</td><td>10.00</td><td>Stamp on Vakalath</td><td>10.00</td></tr>
<tr><td>Fee for services of process</td><td>9.00</td><td></td><td></td></tr>
<tr><td>Stamp on Exhibits</td><td>15.00</td><td></td><td></td></tr>
<tr><td>Writing charge</td><td>100.00</td><td></td><td></td></tr>
<tr><td>Advocate fee</td><td>2000.00</td><td></td><td></td></tr>
<tr><td>Total</td><td>2509.00</td><td>Total</td><td>10.00</td></tr>
</table></td></tr>
<tr><td>9.</td><td>The Mode and manner of deposit of Compensation
(இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை)</td><td><u>முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.</u>
1) முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/- 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி</td></tr>
</table>

		சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. 2) மேற்படி இழப்பீட்டு தொகை அதற்கு செலுத்தப்பட்ட வட்டி மற்றும் செலவு தொகையை 2-ம் எதிர்மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள உரிமை அளித்து உத்தரவிடப்படுகிறது. 3) மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP592024, IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-000268-2024 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 4) மேற்படி இழப்பீட்டு தொகையை மனுதாரர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய முறையில் உடனடியாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 5) மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரரே மேலொப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும். 6) வழக்கறிஞர் கட்டணமாக ரூ.2,000/- என நிர்ணயிக்கப்படுகிறது. 7) மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த

		வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 8) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.
10.	The Mode and manner of Disbursement (மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை)	Through *NEFT / RTGS*
11.	Date of payable Balance Court Fee (பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்)	பாக்கி நீதிமன்றக் கட்டணம் ஏதேனும் இருப்பின் மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.

Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., - Vs- Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020

மோ.வா.வி.கோ.எண்.60/2024

1.	(Name and Address of the Claimant) (மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	Minor R. Sri Pranav S/o. T.Raman (Age 3) (Minor Petitioner rep by his guardian of father T. Raman) T. Raman, S/o. Thirisanku, (Age 27) residing at : No.150-B, Ayyanarkovil Street, Singirikudi & Post, Cuddalore Taluk, Cuddalore District – 605007.
2.	Name and Address of the Respondents (எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	1) L. Sivanathan, S/o. Loganathan, No.10, Mariyammankoil Street, Chellancherry & Post, Cuddalore Taluk. Cuddalore District – 605 106. 2) The Branch Manager, Cholamandalam MS General Insurance Company Ltd., BE Well Hospital Campus Inside, Bharathi Road, Cuddalore & Taluk, Cuddalore District – 607001.

<table>
<tr><td>3.</td><td>Date of Filing of the Claim Petition
(மனுதாக்கல் செய்யப்பட்டநாள்)</td><td>03.01.2024</td></tr>
<tr><td>4.</td><td>Date of Award
(உத்தரவு பகரப்பட்ட நாள்)</td><td>23.07.2025</td></tr>
<tr><td>5.</td><td>Amount of Award
(வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை)</td><td>ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)</td></tr>
<tr><td>6.</td><td>Interest Rate Applicable</td><td>7.5%</td></tr>
<tr><td>7.</td><td>Date from which interest is payable
(எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்)</td><td>மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வட்டி வழங்க வேண்டும்</td></tr>
<tr><td>8.</td><td>Costs if any</td><td>2-ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலவு தொகையான ரூ.2499/- செலுத்தி விட்டு 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும்.
<table>
<tr><td colspan="4"><u>Particulars of costs</u></td></tr>
<tr><td colspan="2"><u>For Petitioner</u></td><td colspan="2"><u>For Respondent:</u></td></tr>
<tr><td></td><td>Rs.</td><td></td><td>Rs.</td></tr>
<tr><td>Court fee</td><td>375.00</td><td></td><td></td></tr>
<tr><td>Stamp in Vakalath</td><td>10.00</td><td>Stamp on Vakalath</td><td>10.00</td></tr>
<tr><td>Fee for services of process</td><td>9.00</td><td></td><td></td></tr>
<tr><td>Stamp on Exhibits</td><td>5.00</td><td></td><td></td></tr>
<tr><td>Writing charge</td><td>100.00</td><td></td><td></td></tr>
<tr><td>Advocate fee</td><td>2000.00</td><td></td><td></td></tr>
<tr><td>Total</td><td>2499.00</td><td>Total</td><td>10.00</td></tr>
</table></td></tr>
<tr><td>9.</td><td>The Mode and manner of deposit of Compensation
(இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும்</td><td><u>முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.</u>
1) முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார</td></tr>
</table>

	வழிமுறை)	செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.50,000/-** 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. 2) மேற்படி இழப்பீட்டு தொகை அதற்கு செலுத்தப்பட்ட வட்டி மற்றும் செலவு தொகையை 2-ம் எதிர்மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள உரிமை அளித்து உத்தரவிடப்படுகிறது. 3) மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP602024 IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-000267-2024 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 4) மேற்படி இழப்பீடு தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இளவர் மனுதாரர் 18 வயது பூர்த்தி செய்யும் காலம் வரையிலோ அல்லது மூன்று ஆண்டு காலத்திற்கோ இதில் எது அதிகமோ அதுவரை நிரந்தர வைப்பீட்டில் வைக்க உத்தரவிடப்படுகிறது. 5) மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரரே மேலோப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும். 6) வழக்கறிஞர் கட்டணமாக ரூ.2,000/- என நிர்ணயிக்கப்படுகிறது. 7) மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற

		கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 8) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.
10.	The Mode and manner of Disbursement (மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை)	Through *NEFT / RTGS*
11.	Date of payable Balance Court Fee (பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்)	பாக்கி நீதிமன்றக் கட்டணம் ஏதேனும் இருப்பின் மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.

Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., - Vs- Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020

மோ.வா.வி.கோ.எண்.61/2024

1.	(Name and Address of the Claimant) (மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	T. Raman, S/o. Thirisanku, (Age 27) residing at : No.150-B, Ayyanarkovil Street, Singirikudi & Post, Cuddalore Taluk, Cuddalore District – 605007.
2.	Name and Address of the Respondents (எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	1) L. Sivanathan, S/o. Loganathan, No.10, Mariyammankoil Street, Chellancherry & Post, Cuddalore Taluk. Cuddalore District – 605 106. 2) The Branch Manager, Cholamandalam MS General Insurance Company Ltd., BE Well Hospital Campus Inside, Bharathi Road, Cuddalore & Taluk, Cuddalore District – 607001.
3.	Date of Filing of the Claim Petition (மனுதாக்கல் செய்யப்பட்டநாள்)	03.01.2024

<table>
<tr><td>4.</td><td>Date of Award
(உத்தரவு பகரப்பட்ட நாள்)</td><td colspan="4">23.07.2025</td></tr>
<tr><td>5.</td><td>Amount of Award
(வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை)</td><td colspan="4">ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)</td></tr>
<tr><td>6.</td><td>Interest Rate Applicable</td><td colspan="4">7.5%</td></tr>
<tr><td>7.</td><td>Date from which interest is payable
(எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்)</td><td colspan="4">மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வட்டி வழங்க வேண்டும்</td></tr>
<tr><td rowspan="11">8.</td><td rowspan="11">Costs if any</td><td colspan="4">2-ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலவு தொகையான ரூ.2509/- செலுத்தி விட்டு 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும்.</td></tr>
<tr><td colspan="4"><u>Particulars of costs</u></td></tr>
<tr><td colspan="2"><u>For Petitioner</u></td><td colspan="2"><u>For Respondent:</u></td></tr>
<tr><td></td><td>Rs.</td><td></td><td>Rs.</td></tr>
<tr><td>Court fee</td><td>375.00</td><td></td><td></td></tr>
<tr><td>Stamp in Vakalath</td><td>10.00</td><td>Stamp on Vakalath</td><td>10.00</td></tr>
<tr><td>Fee for services of process</td><td>9.00</td><td></td><td></td></tr>
<tr><td>Stamp on Exhibits</td><td>15.00</td><td></td><td></td></tr>
<tr><td>Writing charge</td><td>100.00</td><td></td><td></td></tr>
<tr><td>Advocate fee</td><td>2000.00</td><td></td><td></td></tr>
<tr><td>Total</td><td>2509.00</td><td>Total</td><td>10.00</td></tr>
<tr><td>9.</td><td>The Mode and manner of deposit of Compensation
(இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை)</td><td colspan="4"><u>முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.</u>
1) முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/- 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும்,</td></tr>
</table>

		மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. 2) மேற்படி இழப்பீட்டு தொகை அதற்கு செலுத்தப்பட்ட வட்டி மற்றும் செலவு தொகையை 2-ம் எதிர்மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள உரிமை அளித்து உத்தரவிடப்படுகிறது. 3) மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP612024 IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-000266-2024 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 4) மேற்படி இழப்பீட்டு தொகையினை மனுதாரர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய முறையில் உடனடியாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 5) மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரரே மேலோப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும். 6) வழக்கறிஞர் கட்டணமாக ரூ.2,000/- என நிர்ணயிக்கப்படுகிறது.

		7) மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 8) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.
10.	The Mode and manner of Disbursement (மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை)	Through *NEFT / RTGS*
11.	Date of payable Balance Court Fee (பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்)	பாக்கி நீதிமன்றக் கட்டணம் ஏதேனும் இருப்பின் மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-

ம.சா.1 : தமிழரசி

ம.சா.2 : ராமன்

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-

ம.சா.ஆ.1 : வழக்கு விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஒளிப்பட நகல்

ம.சா.ஆ.2 : மனுதாரர் தமிழரசி என்பவருக்கான காயச்சான்று ஒளிப்பட நகல்

ம.சா.ஆ.3 : மனுதாரர் தமிழரசி என்பவருக்கான மருந்து பரிந்துரைச் சீட்டு

ம.சா.ஆ.4 : மனுதாரர் தமிழரசி என்பவருக்கான வெளிப்புற நோயாளிச் சீட்டு

ம.சா.ஆ.5 : 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஒளிப்பட நகல்

ம.சா.ஆ.6	:	இளவர் மனுதாரருக்கான காயச்சான்று
ம.சா.ஆ.7	:	இளவர் மனுதாரருக்கான மருந்து பரிந்துரைச் சீட்டு
ம.சா.ஆ.8	:	மனுதாரர் ராமன் என்பவருக்கான காயச்சான்று ஒளிப்பட நகல்
ம.சா.ஆ.9	:	மனுதாரர் ராமன் என்பவருக்கான வெளிப்புற நோயாளிச் சீட்டு
ம.சா.ஆ.10	:	மனுதாரர் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஒளிப்பட நகல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:-

எ.ம.சா.1	:	சங்கீதா

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-

எ.ம.சா.ஆ.1	:	வழக்கு விபத்து சம்மந்தமாக புலன் விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இறுதி அறிக்கை ஒளிப்பட நகல்
எ.ம.சா.ஆ.2	:	1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்கிய காப்பீட்டு சான்றிதழ் ஒளிப்பட நகல்

V ANANTHAN
Digitally signed by V ANANTHAN
Date: 2025.07.23 18:51:17 +0530

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாயர்,
சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.1,
கடலூர்.